தமிழ்நாடு சட்ட மன்றம்

வெள்ளிக்கிழமை, 1972 ஆகஸ்டு, 18.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்ற மண்டபத்தில் மாலை 4 மணியளவில், மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் (திரு சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் சட்டமன்றம் கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்

Raffle Tickets

*27. Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the sale of raffle tickets has declined from September 1971; and

(*b*) if so, the reasons therefor ?

பரிசுச் சீட்டுகள்.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1971-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களிலிருந்து தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டின் விற்பனை குறைந்து வருகிறதா ?

(இ) ஆமெனில், அதன் காரணங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) & (இ) ஆம்.

இந்தக் கால அளவில் பரிசுச் சீட்டு விற்பனை குறைந்ததற்கான காரணங்கள் ஆராயப்பட்டு வருகின்றன. 1970 செப்டம்பர் முதல் 1971 பிப்ரவரி வரையில் உள்ள கால அளவிலும் இது போன்றே பரிசுச் சீட்டு விற்பனை குறைந்திருந்தது.

MR. CHAIRMAN : All the four questions relate to the same subject. Does anybody want to put any supplementary question?

THIRU A. R. DAMODARAN : The Hon. the Chief Minister has not answered the other three questions.

MR. CHAIRMAN : They all relate to the same subject.

* 28 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether a number of raffle tickets of other States have been seized in this State in November 1971; and

(b) if so, the reasons thereof?

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1971 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் இம் மாநிலத்தில் வெளி மாநிலங்களின் பரிசுச் சீட்டுகள் பல கைப்பற்றப் பட்டனவா?

(இ) ஆமெனில், அதன் காரணங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : *(அ) ஆம்.*

(இ) தமிழ்நாட்டில், முதலில் பிற மாநிலப் பரிசுச் சீட்டுகள் விற்கப்படுவதற்கு 8—11—71 முதல் அரசு தடை விதித்தது. மேற் சொன்ன ஆணைகளின் விளைவாக பிற மாநிலங்களின் பரிசுச் சீட்டுகள் கைப்பற்றப்பட்டன. இவ்வரசு எந்த மாநிலங்களுடன் பரிசுச்சீட்டு விற்பனைக்காகப் பரிமாற்று ஏற்பாடுகள் செய்து கொண்டுள்ளதோ அந்த மாநிலங்களுக்கு இந்தத் தடை பொருந் தாது என்கிற வகையில் மேற்கூறப்பட்ட ஆணைகள் பின்னர் திருத்தப்பட்டன. பின்னர் பிற மாநிலங்களோடு செய்து கொண்ட ஒப்பந்தங்கள் அனைத்தையும் ரத்துச் செய்து 23—12—71-ல் நிதித் துறை பிற மாநிலங்களின் பரிசுச்சீட்டு விற்பனையைத் தடை செய்து ஆணை பிறப்பித்தது. இவ்வாணையை எதிர்த்து உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ள காரணத்தினால், இந்த ஆணை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.